பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

ஜவுளி வியாபாரிகளுக்கு ஓர் நற்செய்தி !
பூகொட
தயாரிப்புக்களின் பிடவைத்தினுசுகளுக்கு வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்
ராஜ்கோபால்ஸ்
பூகொட மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2.50

மங்கள வைபவமா?
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
ராஜ்கோபால்ஸ்
(பட்டுச் சேலைகளின் காட்சியகம்)
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுடர் 4 விபவ ஆண்டு மாசி மீ 25 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 றஜப் பிறை 29 (08 - 03 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 79

நாளை சபையின் முதல் அமர்வு; எம்.பிக்கள் பதவி ஏற்பு; ஆனால்....

# ஈழவர் ஜனநாயக முன்னணி நாடாளுமன்றை பகிஷ்கரிக்கும்

## ஜனாதிபதியுடன் பேச்சு ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 8

பொதுத் தேர்தலின்போது, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து, ஈரோஸ் இயக்கத்தின் ஈழவர் ஜனநாயக முன்னணி சார்பில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் 13 பேரும், நாளை நாடாளுமன்றம் கூடும்போது அதில் பங்குபற்றமாட்டார்கள்; பகிஷ்கரிப்பார்கள்.

இதேவேளை ஈரோஸ் பிரமுகர்களுக்கும் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கும் இடையில் வியாழக்கிழமை இரவு பேச்சுவார்த்தைகள் தொடங்கின. நேற்றும் அது தொடர்ந்தது.

பேச்சுவார்த்தைகள் முற்றாக முடிவடைந்த பின்னரே நாடாளுமன்றத்தில் கலந்துகொள்வது சம்பந்தமாக ஒரு தீர்க்கமான முடிவுக்கு வருவது குறித்துப் பரிசீலிக்க முடியும் என்று ஈரோஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த பெப்ரவரி 15ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலின் பின்னர், நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நாளை இடம்பெறுகிறது. அப்போது புதிய எம். பிக்கள் பதவிப் பிரமாணம் செய்து கொள்வர். சபாநாயகரும் தெரிவு செய்யப்படுவார்.

இந்தக்கூட்டத்தில் ஈழவர் ஜனநாயக முன்னணி உறுப்பினர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள் என்று ஈரோஸ் பிரமுகர் திரு. சங்கர் ராஜீவ் தெரிவித்தார்.

மேலும் அவர் சொன்னதாவது:-

அரசுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் பேச்சுக்கள் இன்னும் நிறைவுபெறவில்லை.

எமக்கு எதிரான அச்சுறுத்தல் காரணமாக நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கும் முடிவு எடுக்கப்படவில்லை.

நாடாளுமன்றத்தில் கலந்து கொள்வதாகத் தீர்மானம் எடுப்பதற்கு முன்பதாக சில பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன.

**சாதகமாக அமையலாம்**

நிரந்தரயுத்தநிறுத்தம் அவசியம்.

இந்திய—இலங்கை ஒப்பந்

(6ஆம் பக்கம் பார்க்க)

15 ஆம் திகதி புதுடில்லி செல்கிறார்

## கலைஞர் - ராஜீவ் சந்திப்பு ஈழப்பிரச்சினையும் ஆராய்வர்

சென்னை, மார்ச் 8

தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி எதிர்வரும் 15 ஆம் திகதி புதுடில்லி பயணமாகிறார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்தும் அவர் பிரதமர் ராஜீவ் காந்தி, மற்றும் அமைச்சர் நட்வர் சிங் ஆகியோருடன் பேச்சுக்கள் நடத்துவார் என்று சென்னை வட்டாரங்கள் தெரிவித்தன.

தி. மு. க. எம். பி. திரு வை. கோபாலசாமி இலங்கை வந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனுடன் பேசிவிட்டு கடந்த சனிக்கிழமை சென்னை திரும்பினார்.

அதன் பின்னர் திரு. கருணாநிதி புதுடில்லி செல்வதால் அவர் பிரதமருடன் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பேசுவது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஓ-எ)

## பேச்சுக்கள் மூலமே தீர்வு கருணாநிதி வலியுறுத்து

திருச்சி, மார்ச் 8

இலங்கையில் தனி ஈழத்தை பிரச்சினையாக வைத்துப் பேச்சுவார்த்தை நடத்துவது என்பதைவிட, தமிழீழத்தில் நிரந்தரமான நிலையான அமைதியை ஏற்படுத்துவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் உட்பட அனைத்து அமைப்புக்களும் பேச்சுக்கள் மூலம் தீர்ப்புக் காணவேண்டும் என்பதே முக்கியமானதாகும்.

இவ்வாறு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதிநேற்று திருச்சியில் செய்தியாளருக்கு பேட்டியளிக்கையில் கூறினார்.

இலங்கையில் தனி ஈழம் வேண்டும் என்பது பிரச்சினை அல்ல.

அங்கே நிரந்தரமான அமைதியை ஏற்படுத்துவதே தலையாயகடமை.

இலங்கைக்குப்பயணம்செய்த தி. மு. க. எம்.பி திரு.கோபாலசாமியைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி இலங்கைஅரசு விடுத்துள்ள கோரிக்கையை இந்திய மத்திய அரசு ஏற்றுக்கொள்ளாது என நான் நம்புகின்றேன்.

இவ்விடயத்தினால் மத்திய அரசுடன் எனது அரசு கொண்டுள்ள உறவில் பிரச்சினை ஏதும் எழாது—என்றார். (உ-எ)

## இலங்கைத் தூதரக அதிகாரி கனடா நாட்டில் தஞ்சம்

கொழும்பு, மார்ச் 8

இலங்கையின் இரண்டாவது இராஜதந்திரியாக ஒட்டாவாவில் பணியாற்றிய திரு.பணிக்கன் கனகரத்தினம் இலங்கைக்குத் திரும்ப மறுத்துக் கனடாவிலேயே தஞ்சம் கோரியுள்ளார்.

51 வயதான திரு. கனகரத்தினம் ஒரு சிரேஷ்ட ராஜதந்திரி.

ஒட்டாவாவில் இலங்கைத் தூதரகத்தில் கடந்த மூன்று வருடமாகப் பணியாற்றி வந்தார்.

இலங்கைக்குத் திரும்பினால் தமது உயிருக்கு ஆபத்து ஏற்படும் எனக் கூறி அவர் அகதி நிலையில் தஞ்சம் கோரியிருக்கிறார்.

இச்செய்திக்குக் கனடிய பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து இருந்தன.

இச்சம்பவம் பற்றிக் கனடாவில் உள்ள இலங்கைத் தூதர் ஜெனரல் திஸ்ஸ வீரதுங்கா எதுவும்கூற மறுத்துவிட்டார். (உ-எ)

## மக்கள் வங்கிக் கிளைகளில் வெள்ளியன்று வேலை!

யாழ். மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கிக்கிளைகள் யாவும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை திறந்திருக்கும்.

வாரத்தில் ஐந்து நாட்களிலும் வேலை செய்வதற்கு வங்கிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதை அடுத்தே எதிர்வரும்வெள்ளிக்கிழமை அனைத்துக் கிளைகளும் திறக்கப்பட இருக்கின்றன.

சுன்னாகம் கிளையில் அன்று மீளக் குடியமர்தல் நிவாரணம் மட்டுமே வழங்கப்படும் என மக்கள் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-ஜ)

## வடக்கு, கிழக்கிற்கு மாவட்ட அமைச்சர்கள்

மட்டக்களப்பு, மார்ச் 8

வடக்கு -கிழக்கு மாகாண சபையின் செயற்பாடுகளை மாவட்ட ரீதியில் நேரடி மேற்பார்வை செய்ய சகல மாவட்டங்களிலும் மாவட்ட அமைச்சர்களை நியமனம் செய்ய மாகாண சபை தீர்மானித்துள்ளது.

இத்தகவலை முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் அண்மையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர் ஒருவர் மாவட்ட அமைச்சர் பதவி வகிப்பார்.

கச்சேரிகளில் முன்பு மாவட்ட அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்த அலுவலகம் அவருக்கு வழங்கப்படும்.

மாவட்ட கச்சேரிகள் தோறும் மாவட்ட தகவல் இணைப்பதிகாரிகளும நியமனம் செய்யப்படவிருக்கிறார்கள்.

மாவட்ட ரீதியில் அரச திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்களை கண்காணிப்பதற்கு திடீர் பரிசோதனைக்குழு ஒன்றும் அமைக்கப்படும்.

இதேசமயம் ஒரு மாகாண

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸார் மீண்டும் சீருடையில் யாழ்ப்பாணத்தில் கடமையில்

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ்ப்பாண மாவட்டத்தில் பொலீஸார் மீண்டும் சீருடை அணிந்து கடமையில் ஈடுபட உள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் உள்ள பொலீஸ் பிரிவில் பணிபுரியும் பொலீஸ்காரர்கள் முதலில் சீருடையில் சேவையில் ஈடுபடுவர் என்றும் —

பின்னர் படிப்படியாக ஏனைய பிரிவுகளுக்கும் அது அமுலாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

'சென்றி'களுக்கு அருகில் முதியவர்கள், பெண்கள், இளைஞர்கள் இப்போது எதிர்நோக்கும் வேண்டாத அசௌகரியங்களைத் தவிர்க்கும் பொருட்டு (சீருடை அணிந்த) பொலீஸார் விரைவில் அவற்றுக்கு அருகில் சேவையில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுமக்கள்பொலீஸாரை இனம் காணுவதற்கும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் பொதுமக்களின் தேவைகளைப் பொலீஸார் தீர்த்து வைக்க ஏதுவாகவும் இந்நடவடிக்கை அமையும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-க-5)

யாழ். மாவட்டத்தில் மட்டும்

## 1988 ஏப்ரல் தொடக்கம் காணமற் போனவர்கள்: 76

யாழ்ப்பாணம், மார்ச் 8

1988 ஆம் ஆண்டு ஏப்ரல் தொடக்கம் நேற்று வரை யாழ். மாவட்டத்தில் 76 பேர் காணமற்போயுள்ளதாக பொலீஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பொலீஸ் நிலைய வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

88 ஆம் ஆண்டு ஏப்ரலில் 12 பேரும், மே மாதத்தில் 6 பேரும், ஜூனில் 6 பேரும், ஜூலையில் 2 பேரும், ஆகஸ்டில் 7 பேரும், செப்டம்பரில் 3 பேரும், ஒக்டோபரில் 3 பேரும், நவம்பரில் 14 பேரும், டிசம்பரில் 9 பேரும்–

89 ஆம் ஆண்டு ஜனவரியில் 6 பேரும், பெப்ரவரியில் 8 பேரும் காணமற்போயுள்ளார்கள் என்று புகார் செய்யப்பட்டுள்ளது. (ஓ-க-5)

### ஆசிரியர் இடமாற்றம்

ஆசிரியர்களின் (1989 ஆம் ஆண்டுக்கான) வருடாந்த இடமாற்றங்களை உடனடியாக அமுல் செய்யுமாறு கல்விச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-எ)

### இலங்கையிலிருந்து தண்ணீர் ஏற்றுமதி

கொழும்பு, மார்ச் 8

வளைகுடா நாடுகளுக்கு இலங்கையில் இருந்து தண்ணீர் ஏற்றுமதிசெய்யப்படவிருக்கிறது.

போத்தலில் சுத்தமான தண்ணீரை அடைத்துஏற்றுமதி செய்யும் திட்டம் ஒன்றை வர்த்தக கப்பற்றுறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் தயாரித்து இருக்கிறார்.

### முச்சந்தி முரளி



ஏற்றுமதி செய்யிறதோடை பச்சைத் தண்ணியிலை பலகாரம் சுடுறது எப்பிடி எண்டு சொல்லிக் குடுத்தாலும் நல்லது கண்டியளோ......!

## 9 ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டம் நாளை

கொழும்பு, மார்ச் 8

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டம் நாளை சம்பிரதாய பூர்வமாக நடைபெறும்.

இதனையொட்டி தலைநகரிலும் தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

சில குழுக்கள் விடுத்துள்ள ஹர்த்தால் கோரிக்கையை முறியடிக்கும் விதத்தில் நாளைபட்டது பொதுசனப்பாதுகாப்புச் சட்டம் அமுல் நடத்தப்படும் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் பாதுகாப்பு முன்னேற்பாடாக ஜெயவர்த்தனபுரத்தில் நாடாளுமன்றக் கட்டடத்தைச் சுற்றியுள்ள வீடுகளில் தேடுதல் நடவடிக்கைகளைப் பாதுகாப்புப் படையினர் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## உப சபாநாயகர் பதவிக்கு நடிகர் காமினி பொன்சேகா

கொழும்பு, மார்ச் 8

எதிர்பார்க்கப்பட்டபடி புதிய நாடாளுமன்றத்தின் சபாநாயகர் பதவிக்கு முன்னாள் அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மதுவை நிறுத்துவது என அரசாங்க நாடாளுமன்றக் குழு ஏகமனதாக முடிவுசெய்தது.

குழுவின் கூட்டம் நேற்று ஜனாதிபதி பிரேமதாஸ தலைமையில் நடந்தது.

உபசபாநாயகர் பதவிக்கு திரு. காமினி பொன்சேகாவையும் —

கமிட்டிகள் உப தலைவர் பதவிக்கு திரு. ஆரிய ரெக்காவையும் நிறுத்துவது என்றும் ஏகமனதாக முடிவுசெய்யப்பட்டது. (உ-எ)

## தந்தையின் சிதையில் மகன் உயிருடன் எரிப்பு!

மாயானத்தில் எரிந்து கொண்டிருந்த தந்தையின் பிணத்தின் மீது தனயனைத் தூக்கி எறிந்ததுஒரு கோஷ்டி.

தனயனும் சிதையில் அகப்பட்டு எரிந்து சாம்பரானார்.

இந்தச் சம்பவம் தென்பகுதியில் தெதுவாவக் என்னும் இடத்தில் இடம்பெற்றது.

திலகரத்தின தஸநாயக்கா (வயது 90) என்பவரின் பூதவுடல் மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது.

அச்சமயம் ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்று இறந்தவரின் 37 வயது மகனை தஸநாயகாவையும் அவரது கூட்டாளி சோமசிரி என்பவரையும்இழுத்துக் கொண்டு வந்து எரிந்து கொண்டு இருந்த சிதைமீது தூக்கியெறிந்துவிட்டுச் சென்றது.

பொலிஸார் மயானத்திற்கு வந்தபோது ஒருவர் எரிந்து சாம்பராகி விட்டார். மற்றவரின் பாதிஎரிந்த உடல்மட்டுமே மீட்கப்பட்டது. (உ-எ)

## ஈழத்தில் கோபாலசாமியை இந்தியப்படை சுற்றிவளைத்தது

சென்னை, மார்ச் 8

ஈழத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின்முகாமில் நான் தங்கி இருந்தபோது அந்த முகாம் இரு தடவைகள் சுற்றிவளைக்கப்பட்டது,

இந்திய அமைதிப் படையினரால் கைது செய்யப்படுவதிலிருந்து தப்புவதற்காக நாங்கள் அடிக்கடி முகாமுக்கு முகாம் இடம் மாறவேண்டியிருந்தது.

ஈழத்தில் 24 நாட்களைக் கழித்த தி. மு. க வைச் சேர்ந்த எம்.பி திரு. வை. கோபாலசாமி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் சென்னையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் சொன்னதாவது:

இந்தியா தனது படைகளை இலங்கையில் இருந்து திரும்பப் பெறவேண்டும். தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்களை விடுதலைசெய்து பேச்சுக்களுக்கான ஓர் உகந்த சூழ்நிலை உருவாக்கப்பட்டாலன்றி இணைக்கப் பேச்சுக்களுக்கான

(6ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

08 – 03 – 1989

மாசி– 25 புதன்கிழமை

சுபநேரம்:
04 – 55 முதல் 12 – 25 வரை

ராகுகாலம்:
12 – 25 முதல் 01 – 55 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த தேக்கு அலுமாரி, கபேட், மேற்படிப்பிற்கான புத்தகங்கள், புத்தக அலுமாரி, சாப்பாட்டு மேசை, கதிரைகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 14/2 (7) பிளட்சர் ஒழுங்கை, சுண்டிக்குளி. (9908)

புதிய மொடல் C.50 C.70 (Sup Cup) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R. தியாகராஜா, 18, அம்மன் ரோட், யாழ்ப்பாணம். (9777)

தளபாடங்கள், அலுமாரி, கட்டில், மெத்தைகள், T.V., றேடியோ, குளிர்சாதனப் பெட்டி, மேசை, கதிரை, செற்றி, Show-Case, கண்ணாடி மேசை, லாச்சி மேசை, மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. சிங்காரவேல் குருக்கள், வீரமாகாளி அம்மன் கோயில்வளவு, நல்லூர். (9781)

கோழி எரு மலிவாக விற்பனைக்குண்டு. தொடர்பு: ராஜா ஸ்ரோர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (9901)

நல்ல நிலையிலுள்ள பற்றறி சார்ஜ்ஜர் உடன் விற்பனைக்கு உண்டு. பிக்பென்ஸ் "B" சிங்கர் கொம்பனி முன்பாக) கண்டி வீதி, கிளிநொச்சி. (9766)

## கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

நாற்பத்தைந்து நாட்களில் வளர்ச்சியடையும் (Dekalb) பிறவுண் சேவல் குஞ்சு விலை ரூ. 4/50 பேட்டுக் குஞ்சும் (8-3-89) புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. இல. 9. கந்தையா லேன், சுன்னாகம், புகையிரத நிலையத்திற்கு அண்மையில். (9658)

நாற்பத்தைந்து நாட்களில் வளர்ச்சியடையும் (Dekalb) பிறவுண் சேவல் 6ஆம் திகதி, 7ஆம் திகதி, 8ஆம் திகதி வரை ஒவ்வொரு நாளும் விநியோகிக்கப்படும். விலை ரூபா 4/50. உடன் பெற்றுக்கொள்ளவும். இல 9 கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (9630)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 8 ஆம் திகதி புதன் கிழமையும், Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக்குஞ்சுகள், கறுப்பு சேவற்குஞ்சுகள், Hisex பிறவுண் பேட்டுக்குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் 9 ஆம் திகதி வியாழக்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன் கொக்குவில். (9650)

Broiler இறைச்சிக்கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள், சூப்குஞ்சுகள், விருத்துக்குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம்செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/1771)

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை, சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள், சிவப்பு சேவற்குஞ்சுகள், Golden Comet சிவப்புப்பேட்டுக்குஞ்சுகள், Hy-line கறுப்பு வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/1770)

## தேவை

யாழ் மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் வாடகைக்கு வீடு உடன் தேவை. தொடர்பு கொள்ளவும். No. 34, C/o உதயன் யாழ்ப்பாணம். (9753)

## தேவை

யாழ் வந்துள்ள கனடா, நோர்வே மணமக்களுக்கு மணமக்கள் (ஆண்- பெண் இருபாலாரும்) தேவை. யாழ் இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த 35 வயது செவ்வாய் குற்றமுள்ள பாவம் குறைவு (M.Sc U K) என்ஜினியருக்கு டாக்டர், எக்கவுண்டன் மணமகள் தேவை. ABCDE 328, நாவலர் வீதி, ஆனைப்பந்தி. (9904)

## அவசரம் தேவை

மிருக வைத்தியர், விவசாய என்ஜினியர் ஒவ்வொருவர் உடனடியாக ஓமானிற்குத் தேவை. சகல வசதிகளுடனும் குடும்பத்தையும் கொண்டுசெல்லலாம். விபரம் நேரில்:-திருமதி P. டானியல், K. K. S. Road, மல்லாகம் சந்தி. Millar House. (9911)

## உங்கள் சேவை

றபர் ஸ்ராம், பிளாஸ்ரிக் நேம் போட் செய்து கொள்ளவும். சகலவிதமான மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள நாடுங்கள் பிக்பென்ஸ் "B" (9765)

அமெரிக்கா செல்வதற்கான விண்ணப்பப்பத்திரம் க. பொ. த. உயர்தரம், வர்த்தமானியில் வெளியாகும். வேலை வாய்ப்பு விண்ணப்பங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் மொத்தமாக, சில்லறையாக இங்கே கிடைக்கும். பிக்பென்ஸ் "B" (9764)

## ஓடருக்கு

பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தேவையான (Tie) ரை எம்மிடம் கைவசம் உண்டு. ஓடருக்கும் செய்துகொடுக்கப்படும். தேவைக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். மேலும் பிரின்டிங் வேலைகளும் செய்துகொடுக்கப்படும். நியூ வசந்தா பிரின்டிங் சென்றர் 248, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (9906)

## AIR FORCE RETIRED OFFICERS

தங்கள் விலாசத்தை உடன் அனுப்பவும். பென்சன் / ETC ஆகிய விடயங்கள் ஆராயப்படும். Rajah Mahendran General Manager M S Iindustries Irupalai Rd Kondavil. (9910)

## அமெரிக்க விசா

ரோமன் எழுத்துக்களில் பிரதிபண்ணப்பட்ட அமெரிக்க விசா விண்ணப்பங்கள் தொடர்பான விபரங்களுக்கு இங்கே வாருங்கள்! க. ஜெயராஜசிங்கம், இல. 15, ஆடியபாதம் றோட், கல்வியங்காடு, நல்லூர். (9776)

## பாலர் ஆசிரியர் பயிற்சி

பாலர் ஆசிரியர் சங்கம் நடாத்தும் பாலர் ஆசிரியர் பயிற்சிநெறி க. பொ. த. (சா/த) சித்திபெற்ற பெண்கள் கற்கலாம். சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் நடைபெறும். நேரில் வரமுடியாதோர் தபால்வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம் மே/பா உயர்கலைக் கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (9770)

## வகுப்புகள்

Civil Engineering விரும்பிய பாடநெறியில் துரித இரு மாத வகுப்பு. கணிதம், ஆங்கிலம் அறிவுடையவர்கள் விபரங்களுடன் 15-03-1989 முன்பாக தபால் மூலம் விண்ணப்பிக்கவும். 819, Hospital Road Jaffna (9775)

## தராசுகள், படிகள் விற்பனைக்கு

100 கிலோ விறகு தராசுகள் Salter ணிக்கூட்டு தராசுகள், Avery மேடைத்தராசுகள், மற்றும் சகல தராசுகள், படிகள், அளவைகள் விற்பனைக்குண்டு. சகல தராசுகளும் திருத்தம் செய்தல், கிலோவாக மாற்றுதல் போன்றவற்றிற்கும் தொடர்பு கொள்ளுங்கள்: 659, ஆஸ்பத்திரி வீதி, (இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் முன்பாக) (9637)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி




**செல்வன் ஐயாத்துரை ஜெயம்**
(யூனிவேர்சல் ரெலக்ஸ்)

மலர்வு: 25-07-1962    உதிர்வு: 07-03-1987

ஜெயமென பெயர் கொண்டதனால் ஜெயமாகிப் போனாயோ...
உன்முகம் காணாமல் தவிக்குதடா தாயுள்ளம்!
உன் எழில் காண ஏங்குதடா தந்தைமனம்!
உடன் பிறந்த உள்ளங்கள் உருகியே போனதையா!
அன்பான மைத்துனனின் அமுதமொழி கேட்க
ஆவலாய் அத்தான்மார்கள்
அண்ணி என்றழைத்த அன்பான ஜெயமே!
உன் குரல் ஓய்ந்த தேனோ...?
என் அன்புச் சித்தப்பாவே! எங்கு உன்னைத் தேடுவது!!

பப்பா, அம்மா, சகோதரர்கள்.

292 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (9907)




all kinds of watch & clocks BATTERIES are available

**DiLKO WATCH WORKS**
404½ HOSPITAL Rd. JAFFNA (OPPOSITE BUS STAND)

**சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)**

## வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட 3000/- வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. வைப்புப் பணமாக ரூபா 250/-செலுத்தி விண்ணப்பப்பத்திரத்தை சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் பத்திரத்தைப் பூர்த்தி செய்து தபால் உறையின் இடது பக்க மூலையில் வெற்றுச் சாக்குக் கேள்வி என எழுதப்பட்டு " பொது முகாமையாளர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை " என்ற முகவரிக்கு 15-3-1989 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
சங்கானை ப. நோ. கூ. சங்கம்.
(C/1814)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் கந்தசாமி இரத்தினம்மா**

பிறப்பு: 4-5-1937    இறப்பு: 8-2-1989

கொழும்பு பெரிய தபாற் கந்தோரில் கடமையாற்றிய தனது கணவரை பறிகொடுத்த நிலையில் அன்பிற்கும் பண்பிற்கும் பிறப்பிடமாய் அன்புடன் தனது பிள்ளைகளை வழி நடத்தி இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாயாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், சகோதரர்கள், மைத்துனி

நீலந்தலை,
கெருடாவில்,
தொண்டமானாறு. (9784)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**கந்தையா யோகநாதன்**
(யோகன்)

அன்னையின் மடியில்: 03-11-1969    விண்ணில்: 06-02-1989

அன்புப் பெற்றோர், சுற்றத்தினர், நண்பர்கள். (9785)

# அதிபர் ஓய்வு

சாவகச்சேரி மார்ச் 8 மட்டுவில் தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ் வித்தியாசாலை அதிபர் திரு. சி. பொன்னுத்துரை தமது 39 வருட ஆசிரிய சேவையின் பின்பு ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் 21 வருடங்கள் உதவி ஆசிரியராகவும் 18 ஆண்டுகள் அதிபராகவும் சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (க-31)

# சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ் - மானிப்பாய் வீதி (கோணந்தோட்டம்) உதயதாரகை, சனசமூக நிலையம் ஆண்டு நிறைவை ஒட்டி மகா சிவராத்திரி தினத்தன்று ரசிகர்கள் மத்தியில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பின் முடிவுகள் பின்வருமாறு:-

**முதல் பரிசு: துவிச்சக்கர வண்டி**
இல. 829
எஸ். சற்குணலிங்கம்
பஜார் லேன், செம்மாதெரு, யாழ்.

**இரண்டாம் பரிசு:**
இல. 201
ரி. நாகேந்திரன்,
108, சிவன் வடக்கு வீதி, யாழ்.

**மூன்றும் பரிசு:**
இல. 413
எஸ். செல்வராசன் (கட்டட ஒப்பந்தக்காரர்)
பிரதான வீதி யாழ்.

(C/1806)

# கொம்பியூட்டர் பயிற்சி

## Diploma in Data Processing & Computer Programming Course

புதிய பிரிவுகள்: 11-03-89 (Sat & Sun)

1. BASIC
   2 1/2 MONTHS — 8.00 a.m - 10.00 a.m
2. ADVANCED BASIC
   1 1/2 MONTHS — 11.00 a.m - 1.30 p.m
3. COBOL
   3 MONTHS — 10.00 a.m - 11.30 a.m (12-03-1989)

**1st Payment: Rs. 400/-**

IBM Super/XT, IBM Compatible Apple உட்பட பல நவீன Computer களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

✶ மல்லாகம் கிளையில் 10-03-89 (3.30 p.m) இற்கு பிரிவுகள் ஆரம்பமாகும்.

**IDP Computer Centre**
**342, K. K. S. Road, JAFFNA.**
**Branch: 7th Mile post K. K. S Road, Mallagam.**
[C-1810]

# 8ஆம் மாத நினைவஞ்சலி



**செல்வி விக்னேஸ்வரி கணேசு**

அன்னையின் மடியில்:- 24-06-1966    ஆண்டவன் அடியில்:- 03-07-1988

ஈன்றவர்- மட்டுமல்ல முன்னவரும்
இங்கு மனம் வருந்திட
உடன் பிறந்த சோதரர்களும்
சோதரியும் கண் கலங்கிட
உற்ற நண்பர்களும் உறவினரும்
உளம் மிக ஏங்கிட
பிறந்த மண்ணின் விடிவுக்காய்
மிக்க மகிழ்வுடன் விண்ணைத்தொட்ட
எம் வண்ணமயிலே உன் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்.

அம்மா, அப்பா, அம்மம்மா,
சகோதரி, சகோதரர்கள்,
உறவினர், நண்பர்கள்,

இராச வீதி,
நீர்வேலி. (9779)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC LANGUAGE

பயிற்சிக் காலம்: 2 1/2 மாதம் ஆரம்பம்: 12-03-89

(சனி, ஞாயிறு வகுப்புகள்)

கட்டணம்: ரூபா 950/- இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்.

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிர் ஊட்டப்பட்ட அறையில் கூடியநேர செய்முறைப் பயிற்சி (I. B. M. COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிக்கப்பட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பதிவு செய்யவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 11-03-89




UNIKCO COMPUTER CENTRE

No. 5, மின்சார நிலைய வீதி,

2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(உப தபாற்கந்தோர் அருகாமை)

[C/1792]


★ சாவகச்சேரி, பருத்தித்துறைக்கான

# நீர் விநியோகத் திட்ட வேலைகள் மீண்டும் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், மார்ச் 8

சந்தை நகரங்களுக்கான நீர் விநியோகத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வந்த சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளுக்கான தண்ணீர் விநியோக வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

பிரஸ்தாப வேலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு அமெரிக்க உதவித் திட்டக் குழு ஒன்று விரைவில் யாழ் வரவிருக்கிறது.

யாழ்ப்பாணம் — சந்தை நகர நீர்விநியோகத் திட்டத்தின் (Jaffna —Market Town Water Supply project) கீழ் அமெரிக்க உதவியுடன் யாழ் குடாநாட்டிலுள்ள சந்தை சார்ந்த நகரங்களுக்கு பெரிய அளவிலான விநியோகத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது.

முதலாவது திட்டத்தின் கீழ் சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளுக்கான நீர் விநியோகத் திட்ட வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

ஆனல் தமிழ்ப் பகுதிகளில் ஏற்பட்ட நிலைமை காரணமாக ஆரம்பித்த வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியாமற் போய்விட்டது.

இந்த வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

சாவகச்சேரி, பருத்தித்துறை பகுதிகளுக்கான நீர் விநியோகத் திட்ட வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு 17 கோடியே 80 லட்சம் ரூபா செலவாகும் என முன்னர் மதிப்பிடப்பட்டிருந்தது.

இதுவரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளவற்றின்படி குழாய் அமைப்பு வேலைகளில் சாவகச்சேரியில் சுமார் 80 சதவீதமும், பருத்தித்துறையில் சுமார் 85 சதவீதமும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகவும் அறிய வருகிறது.

மொத்த வேலையில் சுமார் 40 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பகுதிக்குத் தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கு குடத்தனையில் நான்கு குழாய்க் கிணறுகளும், பருத்தித்துறைப் பகுதிக்கு தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கு மணற்காட்டில் நான்கு குழாய்க் கிணறுகளும் அமைக்கப்படும். (அ-ஐ)

## விசேஷ புலனாய்வு பிரிவு

கொழும்பு, மார்ச். 8

அரசியல்வாதிகள் மற்றும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகளுக்கு எதிரான முறைப்பாடுகளை விசாரணை செய்ய விசேஷ புலனாய்வு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

சி.ஐ.டியின் முன்னாள் இயக்குநர் திரு. பென்னற் பெரேரா இப்பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இப்பிரிவில் பதியப்படும் முறைப்பாடுகள் குறுகிய காலத்தினுள் விசாரணை செய்து முடிக்கப்படும் என பொலிஸ் மா அதிபர் எர்னஸ்ட் பெரேரா சொன்னார். (இ-எ)

## ஐ. தே. க செயற்குழு உறுப்பினர்கள்

கொழும்பு, மார்ச். 8

ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழுவின் இவ்வருடத்திய நிர்வாகிகள் விவரம்வருமாறு;

தலைவர்: திரு. பிரேமதாச

உபதலைவர்: திரு. டி. பி. விஜயதுங்க

தவிசாளர்: டக்டர். திரு. எம்.சி. எம். கலீல்

செயலாளர் திரு. ரஞ்சன் விஜயரத்தின

பொருளாளர்: திரு. கே. டபிள்யு, தேவநாயகம்

செயற்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட தமிழ், உறுப்பினர்கள் வருமாறு,

மத்தியமாகாணம்: வி. புத்திரசிகாமணி

கிழக்கு மாகாணம்: வி. ஆர்.நவரத்தினராசா

வடக்கு மாகாணம்: திருமதி ராஜமனோகரி புலேந்திரன். இ-எ)

## தொழிலுக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்பட வேண்டும்

"தொழிலாளி - முதலாளி உறவு பேணப்படவேண்டும். ஒவ்வொரு தொழிலுக்கும் ஏற்ற சம்பளம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் வர்த்தக ஊழியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்துக்கு தலைமை வகித்த திரு. வே. தியாகராசா தமது உரையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் யாழ்ப்பாணத்தில் ஞாயிறு விடுமுறை வர்த்தக ஊழியர்களுக்கு பிரகடனம் செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. எமது சங்கம், எந்த இயக்கத்துக்கும் எந்தக் கட்சிக்கும் சார்பின்றி செயல்படும்'' என்றார்.

சங்கத்தின் செயலாளர் தமது ஆண்டு அறிக்கையை சமர்ப்பித்து பேசியபோது, "இராணுவ நடவடிக்கை காலத்தில் பல வர்த்தகர்கள் கடைகளைப் பூட்ட வேண்டி இருந்தது. அக்காலத்தில் பல வர்த்தக ஊழியர்களுக்கு சம்பளம் எதுவும் வழங்கப்படவில்லை. மாகாண அரசு இக்கால சம்பளத்தை வர்த்தக ஊழியர்களுக்கு வழங்க ஒத்துக் கொண்டுள்ளது'' என்றார்

வடக்கு—கிழக்கு மாகாண அரசின் சார்பில் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு, எஸ்.ஆர்.ரகுநாதன் பேசுகையில்;மாகாண அரசு அதற்குக் கிடைத்த நிவாரண நிதியின் ஒரு பகுதியை பாதிக்கப்பட்ட வர்த்தக ஊழியர்களுக்கு வழங்க முன்வந்துள்ளது எனவும் இந்த நிவாரணம் வகுப்புத் தொழிலாளர்களுக்கும் கிடைக்கவுள்ளது எனவும் குறிப்பிட்டார். (க)

## ஆலய அறிக்கை

அனலைதீவு ஸ்ரீ எழுமங்கை நாச்சிமார் மனோன்மணி அம்பாள் தேவஸ்தானத்தின் புதிய பிரமாணங்களின் வெள்ளை அறிக்கை வெளியாகியுள்ளது.

ஆலய பரிபாலன சபையினரால் இவ் அறிக்கை பொது மக்களின்பார்வைக்காகஅனலைதீவிலுள்ள பொது நலஸ்தானங்களில் வைக்கப்பட்டுள்ளது. (க-18)




குழாய் கிணறுகள்

TUBE WELLS

பாரிய நவீன இயந்திரங்களின் மூலம்

❀ குழாய் கிணறுகள்

❀ ஆழ்குழாய் கிணறுகள்

ஏற்கனவே

● வெட்டப்பட்ட கிணற்றிற்குள்ளும் அமைத்துக்கொடுக்கப்படும்.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் உள்ள

விவசாயிகள்

● குடிநீர் தேவையாளர்கள் நேரடியாகவோ, கடிதமூலமோ தொடர்பு கொள்ளுங்கள்:

★

தொடர்பு:

"ரீயுப் வெல் இஞ்சினியேஸ்"

208, புகையிரத வீதி, வவுனியா.

TUBE WELL ENGINEER'S

208, Station Road, VAVUNIYA.

[9960]



J; M. J

எஸ்.பி.அன்ரன் வழங்கும் வெளிநாட்டு வேலைகள்

செல்வம் கொட்டும் நாடாம் நன் நாடாம்

ஜப்பான் நாட்டில் வேலை வாய்ப்பு

● தொழிற்சாலை வேலையாட்கள் சம்பளம் 40, 000/-

இரண்டு வருட ஒப்பந்தம்

குறுகிய காலத்தில் பயணம்

உடன் தொடர்பு கொள்ளவும்

● வீட்டுப் பணிப் பெண்கள் தேவை

✈ சிங்கப்பூர், சவூதி, குவைத், பாரின் போன்ற நாடுகளுக்குத் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

சவூதி, குவைத் வேலையாட்கள் தேவை

சம்பளம் 4,000\-

இரண்டு வருட ஒப்பந்தம்

உடன் செய்து தரப்படும். இதர நாடுகளுக்கும் செய்து கொடுக்கப்படும்.

S. P. அன்ரன்

648 1|3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C/1807)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் பகிரன்

கோண்டாவிலைச் சேர்ந்த நாதன் – குகுலகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் பகிரன் தனது நான்காவது பிறந்தநாளைத் தனது இல்லத்தில் வெகு விமர்சையாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, தம்பி டினேஸ் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், சகல கலைகளையும் பெற்று துர்க்காதேவி அருளால் பல்லாண்டு காலம் வாழவேண்டுமென வாழ்த்துகின்றார்கள்.

[9756]

## WANTED

REGIONAL COORDINATORS

**A l-rge non governm-ntal org-nisation requires the services of Two Coordinators to adminster R-habilitation & Reconstruction Programmes in North E-st Province**

**Qu-lific-tions:**

Graduates preferably in Economics, Commerce Business management or Engineering

Proficiency in En-lish essential

**Age: 20 to 45 years.**

Apply to Director, Relief & Rehabilitation,

**SARVODAYA,**
**48, Forest L-ne,**
**Chundikuli, Jaffna**
on or before 18 - 3 - 1989

[9759] **DIRECTOR R R**

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் திரு செ. குணரத்தினம்

(குணம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் – கிளிநொச்சி)

மறைவு: 8–3–1981

அன்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய்
எங்கள் ஒளி விளக்காய், அன்பு மொழி பல பேசி
எங்களை வழி நடத்திய எங்கள் அன்புத் தெய்வமே,
புன் சிரிப்புத் தவழும் உங்கள் முகத்தை
இனி எப்போது காண்போம் அப்பா!
எல்லோருடனும் அன்பாய் பழகி நீதி நெறி நின்று
உலகம் வியக்கும் வகையில் உதவிகள் பல செய்து
இனிது வாழ்ந்து வரும் வேளையில் ......
யார் அப்பா உங்களை அழைத்தது ஆண்டுகள்
எட்டுச் சென்றாலும் உங்கள் நினைவலைகள் எம்மை
விட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீர் மலர் தூவி காலம் எல்லாம் விநாயகனின் பொற் பாதங்களைத் தொழுவோமாக!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி,
மகன்: குணேந்திரராஜன், (ராஜன்)
மகள்: குணேந்திரராணி, (வவா)

குணம் ஸ்ரோர்ஸ்,
கண்டி றோட்,
கிளிநொச்சி.

(9393)

## தேவை

கண்ணாடித் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு ஆண்களும், பெண்களும் தேவை. நேரில் வரவும்.

**த பெனின்சுலா குருப்,**
மகேந்திரா கண்ணாடித் தொழிற்சாலை,
அரஸ்கோ கட்டிடம்,
163, கண்டி வீதி,
அரியாலை யாழ்ப்பாணம்.

(9672)

## சிவசித்திவிநாயகர் திருப்பணி

கிளிநொச்சி

கிளிநொச்சி இரத்தினபுரம் கோவில் வீதி, சிவசித்தி விநாயகர் ஆலயத் திருப்பணியில் மூன்றாவது மகா மண்டப வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பக்த அடியார்கள் அனைவரும் எம்பெருமான் மகா மண்டபம் நிறைவுபெற தங்களால் இயன்ற உதவிகளைசெய்து தருமாறு மிக அன்புடன் வேண்டுகின்றோம்.

வ. செ. இராசரத்தினம்
**சிவசித்திவிநாயக பரிபாலகர்**
34, கோவில் வீதி, இரத்தினபுரம்,
கிளிநொச்சி.

(9771)

**உங்கள் பயண அன்பர்!**

**M. P. LINGAM வழங்கும்**

## ★ பயண ஒழுங்கு ★

கனடா! ஜேர்மனி! அமெரிக்கா!
இத்தாலி! பிரான்ஸ்!

ஆகிய நாடுகளுக்கு துரிதகெதியில்
பயண ஒழுங்குகள் செய்து தருகின்றோம்.
மற்றும்

தாய்வான்! யப்பான்!
ஆகிய நாடுகளுக்கு தொழிற்சாலை ஊழியராகக்
கடமையாற்ற ஆட்கள் தேவை.
மற்றும்

சவூதி, குவைத்
நாட்டுக்கு கிளினர்ஸ் ஆகக் கடமையாற்ற
ஆட்கள் தேவை.
முஸ்லீம் றைவர் சவூதி நாட்டுக்குத் தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்.

Saudi, Kuwait, Bahrain
ஆகிய நாடுகளுக்கு
**HOUSE MAID தேவை**
உடன் தொடர்பு கொள்ளவும்.

## M.P. LINGAM

**764, ஆஸ்பத்திரி வீதி,**
(மைக்கல் றேடியோ சேவிஸ் அருகாமையில்)
**யாழ்ப்பாணம்.**

(9956)

## பிரதேச சபை இடமாற்றம்

வட்டக்கச்சி, மார்ச். 08

கரச்சிப் பிரதேச சபை இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் பழைய கல்விக் கந்தோர் கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (ச- 163)

## பாலர் பாடசாலை

மாங்குளம், மார்ச். 08

மாங்குளம் தென்னிந்திய திருச்சபையினால் மாங்குளம் துணுக்காய் வீதி நாலாம் கட்டையில் பாலர் பாடசாலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. (க-94)

## கசிப்புத் தண்டனை

வட்டக்கச்சி, மார்ச். 08

கிளிநொச்சியைச் சேர்ந்த திருநகரில் கசிப்பு உற்பத்தி செய்து விற்பனை செய்த மூவர் கசிப்பு கொள்கலன்களை தலையில் வைத்தபடி பிரதான வீதியில் சுமார் இரண்டுமணி நேரம் வெய்யிலில் நிறுத்தி வைக்கப்பட்டனர். (ச- 163)

## மாற்றங்கள் தொடருகின்றன

யாழ்ப்பாணம், மார்ச் 8

வடக்கு–கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சில் இன்னமும் பல மாற்றங்கள் செய்யப்படவிருக்கின்றன.

கல்வித் திணைக்கள வட்டாரங்கள் இத்தத் தகவலைத் தெரிவித்தன.

இதன்படி வடக்கிலும் கிழக்கிலும் மாவட்ட கல்விப் சணிப்பாளர்கள் எவரும் கடமை ஆற்றமாட்டார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாண கபையின் கல்வி அமைச்சிற்கு இதுவரை ஒரு சிரேஷ்ட கல்வி அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஏற்கனவே நியமிக்கப்பட்டது தெரிந்ததே. (ஓ-5)

## ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்தி

யாழ்ப்பாணம், மார்ச். 8

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஜயந்தி நாளை வியாழக்கிழமை காலை 5. 30க்கு மங்கள ஆராதியுடன் ஆரம்பமாகும்.

பகல் 11. 30க்கு விசேட பூசையும் பிரசாத வழங்கலும் நடைபெறும். மாலை 5. 30 மணிக்கு பூஜை, பஜனைகள் நடைபெறும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்தியை முன்னிட்டு பல சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

உடுத்துறை சம்பியன் பற்று பகுதிகளில் இலவச சிகிச்சை முகாம் ஒன்று திறக்கப்படும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண விவேகானந்த புத்தகக்காட்சி யாழ்ப்ணத்தில் நடைபெறும்.

அத்துடன் ஸ்ரீ ராம கிருஷ்ணரின் வீடியோப்படம் பல இடங்களில் காட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீ சாரதா உடை தயாரிக்கும் நிலையத்தின் ஆடைக் கண்காட்கியும் அன்றைய தினம் நடைபெறும். (ச)

## தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல மொத்த வியாபார நிலையத்தில் கீழ்க்காணும் வெற்றிடங்கள் உண்டு.

**13 - 03 - 89 க்கு முன் விண்ணப்பிக்கவும்.**

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

| | பதவி | தகைமை | வயதெல்லை |
|---|---|---|---|
| 1. | விற்பனைப் பிரதி நிதி (Sales Representative) | க. பொ. த. (சா. த) வியாபாரத்தில் அனுபவம் வாய்ந்தவராகவும், ஆங்கில அறிவுடையவராகவும் இருத்தல் வேண்டும். | 30 — 40 |
| 2. | கணக்கு லிகிதர் Accounts Clerk | க. பொ. த. (சா. த) கணக்கியலில் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். | 25 — 35 |
| 3. | விற்பனையாளர்கள் (3) Salesmen | ———— | 20 — 25 |

விளம்பர இலக்கம் 35,
C/o உதயன்.

[9769]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### விருத்தாசலம் சிவசங்கர்

படைப்பு: 24- 02- 1972
பறிப்பு: 8- 03- 1987

எங்கள் நெஞ்சத்தில் என்றென்றும் அணையாத சுடராக ஒளிவீசும் உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

**அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, தம்பி தங்கை, உற்றார், உறவினர்கள்.**

பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

(9690)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### இராஜ சௌந்தரலிங்கம் கிரிதரன் (ரவிராஜ்)

மலர்வு: 1968 – 11 – 21
உதிர்வு: 1989 – 02 – 06

எங்கள் மகனே கிரிதரா!
உன் கனவுகள் நினைவுகள் அழிந்ததடா
உறவுகள் அனைத்தையுமே ஏங்க வைத்தேகினயே
உன் மரணம் செய்தியல்ல சரித்திரமே
படைத்துவிட்டாயே
அழுது பயனில்லை அரற்றியும் ஆவதில்லை
மீளாத்துயில் கொண்டு விட்டாய் எங்கள் கிரியே!

எங்கள் தம்பியே கிரிதரா!
சின்ன வயதில் எம்முடன் பகிர்ந்த
நாட்கள் எங்கேயடா?
மண்ணுடன் மண்ணாக கரைந்தவனே
உன்னைக் காணாது உன் அக்காவும், அண்ணாவும்
ஊமைக் கண்ணீர் வடிக்கிறோமடா
மற்றவர்களெல்லாம் இறப்பிற்காக கவலைப்படுவர்
ஆனால் நீ இறப்பின் போதும் விடுதலையின்
பிறப்பிற்காகவே கவலைப்பட்டிருப்பாயே
எங்கள் கிரியே!

எங்கள் செல்வமே கிரியே!
நேற்று வரை மணம் பரப்பி நின்ற ராஜ புஷ்பம் நீ
இன்று நீ ஈழத்தாயின் அர்ச்சனைப் பூக்களில் ஒன்றாய்
வாழும் வயதில் நீ இந்தச் சமுதாயம் வாழ
உன்னையே அர்ப்பணித்தவனே!
இருபது வயதிலே இந்த மண்ணுக்காய் காய்க்காது
கனியாது உதிர்ந்து விட்டவனே
உன் இலட்சியம் என்றும் வாழும் அதுவரை
நீ சாகவில்லை வாழ்ந்து கொண்டிருப்பாய்.
எங்கள் கிரி

உன் பிரிவால் துயருறும்:
அப்பா – இ. இ. சௌந்தரலிங்கம்,
அம்மா – சிவபாக்கியலட்சுமி,
அக்கா – உஷா,
அண்ணா – லிங்கேஸ்வரன்.

அச்சுக்கூட லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(9768)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:-**

நிழல் நீரும் இன்னாத இன்னா தமர் நீரும்
இன்னாவாம் இன்னா செயின்.

**பொருள்:-**

வசிக்கின்ற இடமும் பழக்கமான தண்ணீருங்கூட நோயுண்டாக்குமானால் அவை (விலக்கப்பட வேண்டிய) தீமைகளே; அதைப்போல உடனிருந்து பழகும் உறவினரின் நடத்தையும் துன்பம் செய்வதாக இருந்தால் (அவர்களும் விலக்க வேண்டிய) தீயவர்களே.


# உதயன்

இல. 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.　தொலைபேசி 24805, 22078
08.03.1989　த.பெ. இல23


## நத்தை வேகப் போட்டியா?

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்கான தபாற் சேவையைத் தினசரி நடத்த வேண்டும். பஸ் மூலம் நேரடியாக நடத்தவேண்டும்.

அதற்கான அனுமதியை வழங்குமாறு, வடமாகாணத் தபால் அத்தியட்சகர், கொழும்பில் உள்ள தபால் அமைச்சைக் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணமும், மன்னாரும் வடமாகாணத்தின் இரு மாவட்டங்கள்; இரு அங்கங்கள். அவற்றுக்கு இடையே உள்ள தூர இடைவெளி 212 கிலோ மீட்டர்கள் மட்டுமே. இரண்டுக்கும் இடையே கிளிநொச்சி மாவட்டத்தின் சில பகுதிகளே உள்ளன.

ஆனால் யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாருக்கு வாரத்தில் மூன்று நாட்கள் தான் தபாற் சேவை நடைபெறுகிறது. அதுவும் நேரே தொடும் மூக்கை சுற்றித் தொடும் சிறு பிள்ளைகளின் விளையாட்டுப்போல, யாழ்ப்பாணத்திலிருந்து தபாற் பொதிகள் வவுனியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து ரயில்மூலம் கொழும்பு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் மன்னாருக்கு அனுப்பப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேரடியாக பஸ் மூலம் அனுப்பினால் ஆகக் கூடியது எட்டு மணித்தியாலங்களில் மன்னார் சென்றடையக் கூடிய தபாற் பொதிகள் இப்பொழுது ''ஊர் உலகம்', எல்லாம் உலாவி— சுற்றி அலைந்து — எட்டுப் பத்து நாட்களின் பின்னர் மன்னார் சென்றடைகின்றன! சரியாகச் சொல்வதானால் யாழ்ப்பாணத்தில் தபாலிடப்பட்ட எட்டு நாட்களின் பின்னரே மன்னாரில் உரிய விலாசதாரரின் கைக்குக் கடிதம் கிடைக்கிறது.

இது போலவே, யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை ஆகிய இடங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களும், அந்த மாவட்டங்களிலிருந்து இங்கு அனுப்பப்படும் தபால்களும் உரியவர்களுக்குக் கிடைக்கக் குறைந்தது பத்து நாட்களாவது பிடிக்கின்றது.

மாவட்டங்களுக்கு இடையேயான தபாற்சேவைகள் மட்டும் தான் 'கின்னஸ்' சாதனை புரிந்து வருகின்றன என்பதல்ல!

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் உள்ளூர்க் கடிதங்களே உரியவர்கள் கை போய்ச் சேருவதற்கு எப்படியாவது மூன்று நாட்களையாவது 'உச்சுகின்றன'!!

நாடுகளுக்கு இடையேயான ஏனைய தொலைத் தொடர்புகள் விநாடிக் கணக்கில் சாத்தியமாகிவிட்ட காலமிது. அவற்றை விட்டு, தபாற்சேவையை எடுத்துக் கொண்டாற் கூட, பல்லாயிரக்கணக்கான மைல்கள் தூரத்தே உள்ள நாடுகளில் இருந்து அனுப்பப்படும் கடிதங்கள் இரண்டு மூன்று நாட்களில் விலாசதாரருக்குக் கிடைத்து விடுகின்றன.

ஆனால் இங்கோ.........?

சில கல் மைல் தொலைவில் உள்ள ஊர்களுக்கு இடையேயான தபாற் சேவை வாரக் கணக்கென்று சீரழிகிறது!

தபாற் சேவை அத்தியாவசிய சேவை. மிக முக்கியமான தகவல்களை மக்கள் பரிமாறிக் கொள்ள உதவும் பிரதானமான சேவை. இன்றைக்கு அனுப்பிய தபால் ஆகப் பிந்தியது நாளை மறுதினமாவது விலாசதாரருக்குக் கிடைக்காவிடில், அந்தத் தாபற் சேவையால் என்ன பயன்? ஒரு சில மைல்கள் வித்தியாசத்தில் உள்ள இடங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் அடுத்த நாளாவது கிடைக்க வேண்டாமா?

வாரக்கணக்கில் வைத்துத் தபால்களைச் சேர்ப்பிக்க ஒரு திணைக்களமும் அதற்கு அதிகாரிகளும், ஊழியர்களும் ஆயிரக்கணக்கில் ஏன்?

அல்லது தபால்களை விரைவில் அனுப்பத் தேவைப்படும் நிதி வசதி அரசாங்கத்திடம் இல்லையா? அவ்வாறுயின் தபாற் தலைகள் ஒட்டுமாறு கேட்பதன் அர்த்தம் தான் என்ன?

தபாற் சேவை நத்தை வேகத்தில் நடக்காமல் இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக, தமிழ்ப் பிரதேசங்களில் தபாற் சேவைகள் இப்போது மந்தம் கண்டு விட்டன. அதற்கு நாட்டு நிலைமையைத் தொடர்ந்து காரணம் காட்டிக் கொண்டிருப்பது அரசின் புறக்கணிப்பையும், அதிகாரிகளின் வேண்டா வெறுப்பையுமே பிரதிபலிக்கின்றன.

உரிய அதிகாரிகளிடமும், அமைச்சர்களிடமும் விடயத்தை இடித்துச் சொல்ல அதிகாரிகள் பின்னிற்பதும், அரசாங்கத்துக்கு மிச்சம் பிடித்துக் காட்டி நல்ல பெயர் வாங்க முனைவதும் கூடக் காரணங்கள் ஆகலாம். குறைபாடும், பலவீனமும் எங்கே கண்ணாமூச்சி ஆடுகின்றன என்பதை இனங்காண்பது யாரோ...?

## கட்டாக்காலிகளை ஒழிக்க தொண்டர்கள் நியமனம்

அச்சுவேலி நாவலம்பதி கலாநிதி சனசமூக நிலையம் கட்டாக்காலி கால் நடைகளை பிடித்து கட்டுவதற்கும் கால் நடைகளால் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்வதற்கும் தொண்டர்களை நியமித்துள்ளது.

ஒவ்வொரு கட்டாக்காலிக்கும் 20ரூபாவுக்கு குறையாமல் பயிர் நஷ்டஈடு பராமரிப்பு நாட்செலவு என தண்டம் விதிக்கப்படுகின்றது.

இந்தத் தண்டப் பணத்தின் ஒரு பகுதி சனசமூக நிலையத்தின் வளர்ச்சிப் பணிக்கு பயன்படுத்தப்படுகின்றது. (இ-11)

# இந்துக் கோயில்கள் பற்றி மாநாடு
# காஞ்சிமுனிவருக்கு கலைஞர் அழைப்பு

சென்னை, மார்ச். 7

தமிழகத்தில் உள்ள இந்து ஆலயங்களின் நிர்வாகம் பற்றி ஆராய முதலமைச்சர்



கருணாநிதி

திரு. மு. கருணாநிதி இம்மாதம் 10 ஆம் திகதி மாநாடு ஒன்று கூட்டவிருக்கிறார்.

கோட்டையில் உள்ள செயலகத்தில் பத்தாவது மாடியில் இக் கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி தமிழகத்தில் உள்ள மடாதிபதிகள், ஆன்மீகவாதிகள், சமயச்சான்றோர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

காஞ்சி முனிவர் ஆதிசங்கரர் பெரியவாளுக்கும் முதலமைச்சா அழைப்பு அனுப்பியிருக்கிறார்.

இம்மாநாடு பற்றி முதலமைச்சர் சொன்னதாவது;

ஆலய நிர்வாகம், மற்றும் இந்து அறநிலையத் துறையின் செயலாக்கத்தில்கடைப் பிடிக்கவேண்டிய நெறி முறைகள் குறித்து கலந்து பேசி நல்ல முடிவு மேற்க்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தக்கூட்டம். நடத்தப்படுகிறது.

முக்கியமாக கோவில் நிர்வாகம் அமைய வேண்டிய முறை, கோவில் சொத்துக்களைப் பாதுகாத்தல், அவற்றை மேலும் வளப்படுத்தி கோவில் நிதி ஆதாரங்களைப் பெருக்குதல், பாதுகாத்தல் போன்ற பல்வேறு பொருள் குறித்து விவாதிக்கப்படும்.



காஞ்சிமுனிவர்

இப்படி திரு. கருணாநிதி தெரிவித்தார். (எ)

## வத்திக்கான் பத்திரிகை கண்டனம்

வத்திக்கான் நகரம்மார்ச் 6

வத்திக்கானில் நகரில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று 'சாத்தானின் கவிதைகள்' நூல் தெய்வ நிந்தனை செய்வதாகக் கண்டித்துள்ளது. (எ)

## திபெத் கலவரம்
# தலையிடும்படி உலக நாடுகளுக்கு தலாய்லாமா வேண்டுகோள்

லாஸா, மார்ச். 7

திபெத் தலைநகர் லாஸாவில் இரண்டாவது நாளாகத் தொடர்ந்து திபெத்தியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுதந்திரம் கோரி இக் கிளர்ச்சி நடத்தப்படுகிறது.

இரண்டாவது நாள் சீனப் பொலீஸார் சுட்டு ஒருவர் மரணமானார்.

இரண்டு தினங்களாகநடந்த கலவரங்களில் உயிரிழந்தவர்களின் சரியான எண்ணிக்கையை சீன அரசு வெளியிடவில்லை.

லாஸாவில் உள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் பணிபுரியும் டாக்டர் ஒருவரின் தகவலின்படி 20 முதல் 30 பேர் வரை கொல்லப் பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனிடையில் —

சீனப் பொலீஸாரின் அடக்குமுறைகளைத் தடுத்து நிறுத்தும்படி உலக நாடுகளுக்கு திபெத்தின் ஆத்மீகத் தலைவர் தலாய்லாமா வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

திபெத் விவகாரத்தில் தலையிட்டு அமைதியை ஏற்படுத்த உதவும்படி தலாய்லாமா தனது வேண்டுகோளில் தெரிவித்திருக்கிறார்.

ஆர்ப்பாட்டம் செய்யும் திபெத்தியர்களுக்கு எதிராக ஆயுதங்களை சீனப் படையினர் பாவிப்பதை அமெரிக்க அரசு கண்டித்துள்ளது. (எ)

## 'டிஸ்கவரி' பயணம் 3ஆவது தடவை ஒத்திவைப்பு

வாஷிங்டன், மார்ச் 7

'டிஸ்கவரி' விண் கலம் அனுப்பும் திகதி மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டது.

எதிர்வரும் சனிக்கிழமை இவ்விண்கலத்தை அனுப்ப அமெரிக்காவின் நாஸா நிறுவனம் தீர்மானித்து இருந்தது.

கலத்தில் மின்கோளாறு ஏற்பட்டதால் இரண்டு தினங்கள் கழித்தே 'டிஸ்கவரி' விண் வெளிக்கு அனுப்பப்படும் என்று நாஸா நேற்று அறிவித்தது.

'டிஸ்கவரி' பயணம் ஒத்தி வைக்கப்பட்டது இது மூன்றாவது தடவையாகும்.

இரண்டு வாரங்களுக்கு முன்னரும் ஒரு தடவை இப்பயணம் ஒத்திவைக்கப் புட்டது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாட்டுப் பாடசாலைகளில் 3ம் வகுப்பு முதல் ஆங்கிலம்

தமிழ்நாடு மாநிலத்தில் மூன்றாவது வகுப்பில் இருந்து தான் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

இத்தகவலை மாநிலக் கல்வி அமைச்சர் க. அன்பழகன் வெளியிட்டார்.

பாடசாலைகளில் 1ஆம், 2ஆம் வகுப்புக்களில் ஆங்கிலம் கற்பிக்கப்படமாட்டாது என்றும் திரு. அன்பழகன் தெரிவித்தார். (எ)

## கம்பியூட்டர் தகவல்களை திருடுபவர்கள் கைது!

ஹாம்பர்க்; மார்ச். 7

கம்பியூட்டர்களில் சேகரித்து வைக்கப்படும் பாதுகாப்புச்சம்பந்தமான இரகசிய தகவல்களை களவு எடுத்து சோவியத் உளவாளிகளுக்கு வழங்கிய கோஷ்டி ஒன்றை மேற்கு ஜேர்மன் புலனாய்வு அதிகாரிகள் கைது செய்தனர்.

இக்கோஷ்டியினர் அமெரிக்காவில்பாதுகாப்புத்திணைக்களத்தில் கம்பியூட்டரில் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த தகவல்களை எடுத்து வந்து தங்கள் வீடுகளில்உள்ள கம்பியூட்டர்களில் சேகரித்து வைத்த பின்னர் சோவியத் உளவாளிகளுக்கு விற்று வந்தனர். (எ)

## இராமாயண காலத்து ஆலமரம்

பஞ்சவதி பர்ணசாலையில் ஆலமரம் ஒன்றின் கீழ் ஸ்ரீ ராமனின் தம்பி இலக்குமணன் தவமிருந்தான்.

இது இராமாயணத்தில் வருகிறது.

இலக்குமணன் தவமிருந்த அந்த இடம் வட இந்தியாவில் நாஸிக் என்னும் நகரில் உள்ளது.

அந்த இடத்தில் ஆலமரம் ஒன்றும் இருந்தது.

அது இலக்குமணன் தவமிருந்த காலத்து மரம் என்று இந்துக்கள் நம்பி வந்தனர்.

அதை நாஸிக் மாநகரசபை அண்மையில்வெட்டி விட்டது

இச் செயலைத் எதிர்த்து இந்துக்கள் பேரணி நடத்தினர். (எ)

## தாட்சர் பாட்டியானார்

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கரட்தாட்சர் பாட்டியானார். அவரது புதல்வன் மார்க்குக்கு ஏழுருத்தல் நிறையுள்ள ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. (எ)

## எதிர்க் கட்சிகள் நிராகரிப்பு

பங்களாதேஷ் நாடாளுமன்றத்துக்கு புதிதாக தேர்தல் நடத்தப்படுவது குறித்து பேச்சுக்கள் நடத்த வரும்படி அதிபர் லெப்டினன்ட் ஜெனரல் முகமட் எர்ஷாட் விடுத்த அழைப்பை எதிர்க்கட்சிகள் நிராகரித்து விட்டன. (எ)

****************************************

## விவசாய நிவாரணம் இன்னுமில்லை

மானிப்பாய், மார்ச் 8

உடுவில் கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட விவசாயிகள் பலர் விவசாய நிவாரணம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை நிரப்பிப்பயிர்ச்செய்கை உத்தியோகத்தரிடம் ஒப்படைத்து பல மாதங்களாகியும் இது வரை அவர்களுக்கு எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட மண்வெட்டிகள் வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டபோதிலும் அதனைக் கூட இதுவரை வழங்கவில்லை எனப் புகார்செய்யப்படுகிறது. (ச90)

# கட்புல-செவிப்புல சாதனங்கள் மூலம் அதி சிறந்த போதனை

### ஆங்கிலப் பயிற்சி பூர்த்தி விழாவில் உரை

மானிப்பாய், மார்ச் 8

'கட்புல, செவிப்புல சாதனங்களைப் பயன்படுத்திக் கற்பிக்கப்படும் போதனை மாணவர்களின் மனதில் இலகுவில் இடம் பிடிக்கக்கூடிய முறை ஆகும். இது போன்ற ஆங்கில வகுப்புகள் நடைபெற்ற நிலையங்கள் எல்லாவற்றிலும் இங்குதான் சிறப்பாக கட்புல செவிப்புல சாதனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற, பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி பூர்த்தி விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்ட யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஜெல்ற் (Gelt) நிகழ்ச்சிகளை நடத்தும் ஆசிரியர்களும் ஆங்கிலம் பயிலும் பல்கலைக்கழக மாணவர்களும்இணைந்து மேற்படி நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருந்தனர்.

ஆங்கில வகுப்பு மாணவர் சங்கத்தலைவர் செல்வன் வி. பார்த்தீபன் தலைமையில் விழா நடைபெற்றது.

கல்விப்பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் தமது உரையில் கூறியதாவது;

இத்தாலி, ஜேர்மனி பான்ற நாடுகளுக்கு நான் சென்றிருந்தபோது அந்த நாடுகளின் மொழிகள் தெரியாதிருந்தும் கூட ஆங்கில மொழியை தெரிந்திருந்ததால் சகல நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றவும் அவற்றை புரிந்து கொள்ளவும் முடிந்தது.

ஆங்கிலம் ஒரு சர்வதேச மொழி. பல்கலைக்கழக மாணவர்கள் உயர் கல்விக்கு வேண்டிய உசாத்துணை நூல்களை ஆங்கில மொழியிலேயேபெற வேண்டி உள்ளதால் ஆங்கில அறிவு பல்கலைக்கழகம் செல்லும் ஒவ்வொரு மாணவருக்கும் அவசியம் தேவைப்படும்'

இப்படி அவர் கூறினார்.

நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தில், ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கக் கூடிய பல புத்தகங்களையும்— கட்புல, செவிப்புல சாதனங்களையும் கொண்ட பொருட்காட்சி ஒன்றை கல்லூரியின் வீரசிங்கம் மண்டபத்தில் ஒழுங்கு செய்திருந்தனர்.

வைபவத்தில் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட 'தபீக்கன்' (The Beacon) என்னும் சஞ்சிகை வெளியிடப்பட்டது.

கல்விப் பணிப்பாளர் இச் சஞ்சிகையின் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

சஞ்சிகை பற்றி ஆய்வுரை நிகழ்த்திய கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி இணைப்பாறிய விரிவுரையாளர் திரு. ஏ. கந்தையா கூறியதாவது:

குறுகிய காலப் பயிற்சியை ஆங்கிலத்தில் பெற்றுக் கொண்ட மாணவர்கள் தமது ஆங்கில அறிவின் வெளிப்பாட்டை கட்டுரைகளில் தெரியப்படுத்தியுள்ளனர்.

குறுகிய காலத்திலும் அவர்கள் நிரம்பிய அறிவைப் பெற்றுள்ளது பாராட்டப்பட வேண்டியது ஆகும்.

இப்படி அவர் கூறினார்.

பயிற்சி நிலையத்தின் இணைப்புஅதிகாரியானமானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. எஸ். வி. மகேசவேலு முடிவடைந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றுகையில்; பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவசரம் அவசரமாக ஆங்கிலத்தை கற்பதைத் தவிர்த்து பாடசாலைகளில் கற்கும் போதே ஆங்கிலத்தை கவனமாக கற்றுக் கொள்ள வேண்டும்.

கீழ் வகுப்புகளில் இருந்து ஆங்கிலத்தைமாணவர்களுக்கு போதிப்பதில் கல்லூரிகள் அக்கறை செலுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

பயிற்சி நெறித் தலைவர் திரு. எஸ். தெய்வதவபாலன், இளைப்பாறிய ஆங்கில பாட கல்வி அதிகாரி திருமதி அம்பலவாணர் ஆகியோரும் உரையாற்றினர்.

பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு கல்விப்பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் சான்றிதழ்களை வழங்கினார்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன. (இ-90)

### கோப்பாய் - நல்லூர் - சாவகச்சேரி - நெடுந்தீவு - ஊர்காவற்றுறை:

# இந்தியாவிலிருந்து வந்து மீளக் குடியேறியோரை உதவி அரச அதிபர் பணிமனைகளில் சமுகமளிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 8

இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறையில் வந்து இறங்கி தற்போது கோப்பாய், நல்லூர், சாவகச்சேரி, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மீளக்குடியேறியவர்களுக்கு யாழ். அரசாங்க அதிபர் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதன்படி ஏற்கனவே வழங்கப்பட்ட குடும்ப அளவீட்டுப் படிவங்களைப் பெறத் தவறியவர்கள் கீழே குறிப்பிடப்பட்ட திகதிகளில் அவ்வப்பகுதி உதவிஅரசாங்க அதிபர் பணிமனைகளில் பின்வரும் ஆவணங்களுடன் சமுகமளிக்கவேண்டும்.

தனி நபராயின் அவரின் தந்தை அல்லது தாயுடன் சமுகளிக்க வேண்டும்.

அன்றைய தி[illegible] சமுகமளிக்காவிடின் வேறு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

எடுத்துச் செல்லப்பட வேண்டிய ஆவணங்கள்:

(1) பதிவு அட்டை - இது இந்திய அரசினால் வழங்கப்பட்டது.

(2) தேசிய அடையாள அட்டை - இது இலங்கை அரசினால் வழங்கப்பட்டது.

(3) அடையாள அட்டை - இது காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, யாழ். செயலகத்தில் புகைப்படம் எடுக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டவை.

(4) அறிமுக அட்டை - இது உங்களுக்கோ அல்லது உங்களின் குடும்பத்தில் இந்தியா செல்லாது இங்கு இருந்தவர்களுக்கோ மீளக் குடியமர்தல் நிவாரணம் வழங்குவதற்காக கிராமசேவை அதி[illegible] வழங்கப்பட்டது. இவ்வட்டை பெறுவிட்டால் பெறவில்லை என்பதை உறுதிப்படுத்தும் கடிதம் உங்கள் கிராம சேவை அலுவலரிடம் பெற்று வர வேண்டும்.

**உதவி அரசாங்க அதிபர் பிரிவு—சமுகமளிக்கவேண்டிய திகதியும் பணிமனையும்**

கோப்பாய் — 11-03-1989- கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனை.

நல்லூர் — 10-03-1989 - நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை.

சாவகச்சேரி — 13-03-1989- சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனை.

நெடுந்தீவு — ஊர்காவற்றுறை — வேலணை — 15-03-1989 - வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனை. (ச)

## மீசாலையில் முதியவர் மரணம்

கொடிகாமம், மார்ச். 8

எட்டுப் பிள்ளைகளின் தந்தை ஒருவர் இராணுவ வாகனம் மோதி மரணமானார்.

இச்சம்பவம் மீசாலை கண்டிவீதியில் இடம் பெற்றது.

கச்சாயைச் சேர்ந்த பொ. குஞ்சையா (வயது 6?) என்பவரே இறந்தவர் ஆவார்.

விபத்திற் சிக்கியவர் அதே வாகனம் மூலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்பு மரணமானார். (இ-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகளை
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள்
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

08-03 - 1989 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
★ நெகட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konica
Tudor Forte B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

## இன்று சர்வதேச பெண்கள் தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

உலகெங்கிலும் இன்று சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடப்படுகிறது.

இத்தினத்தை யொட்டி யாழ் பல்கலைக்கழகத்தில் பெண்கள் எதிர்நோக்கும்பிரச்சினைகள் என்ற விடயம்பற்றி கருத்தரங்கு ஒன்று இடம் பெறும்.

கருத்தரங்கு பல்கலைக் கழக கனகசபாபதி மண்டபத்தில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

இத்தினத்தை ஒட்டி மாணவர் இளைஞர் பொது மன்றம் உழைக்கும் பெண்களின் எழுச்சித் தினம் என்ற தலைப்பில் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. (ஓ)

## தாதிகள் நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ். போதனா வைத்திய சாலைகளில் கடமையாற்றுவதற்கு என 33 தாதிகள் புதிதாக நியமனம் பெற்றுள்ளனர்.

கடந்தமுதலாம்திகதி முதல் சுகாதார அமைச்சு இவர்களுக்கான நியமனத்தை வழங்கியது.

இதேசமயம், மேலும் 25 தாதிகளுக்குப் பருத்தித்துறை, காங்கேசன்துறை, தெல்லிப்பளை, திருகோணமலை, மன்னார், அச்சுவேலி, புங்குடுதீவு ஆஸ்பத்திரிகளில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (உ-10)

## முல்லைத்தீவில் மீனவர் வாடிகள் எரிந்து நாசம்

முல்லைத்தீவு, மார்ச் 8

முல்லைத்தீவு, செல்வபுரம் கடற்கரையில் அமைந்திருந்த மீனவர்களின் 15 வாடிகளும், கடையும் எரிந்து நாசமாகின.

கடந்த சனிக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

இது தற்சுசயலாக ஏற்பட்ட தீ விபத்து எனத் தெரிவிக்கப் பட்டது. (ஓ-92)

## செய்திச் சாரம்

### வேட்டுச்சத்தம்

வல்வெட்டித்துறை, மார்ச்8

நேற்றுக்காலை சுமார் 10.45 மணியளவில் துன்னாலை தாமரைக்குளத்தடி பகுதியில் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. (உ-160)

### சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், மார்ச் 8

சுண்டுக்குளி பாண்டியன் தாழ்வுப் பகுதியில் நேற்று மாலை நபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வி. வேலாயுதபிள்ளை (வயது 38) என்பவரே மரண மானவராவர்.

இவர் முன்னர் சிறைச்சாலை அதிகாரியாகக் கடமையாற்றியவர் எனத் தெரிவிக்கப் பட்டது. (ஓ-10)

### அம்மை நோய் பரவுகிறது

காரைநகர், மார்ச் 8

காரைநகரின் சில இடங்களில் அம்மைநோய் வேகமாகப் பரவி வருகிறது.

இதனைத் தடுப்பதற்கு முன் கூட்டியே தடுப்புமருந்து ஏற்றும்படி ஆலோசனை கூறப் பட்டுள்ளது. (ஓ-73)

### மயங்கி விழுந்து மரணமானர்

யாழ்ப்பாணம், மார்ச் 8

முன்னாள் சாரதிப் பயிற்சி போதனாசிரியர் ஒருவர் யாழ். பஸ் நிலையத்துக்கு அருகில் நேற்றுக் காலை 7 மணியளவில் மயங்கி விழுந்து மரணமானர்.

இருபாலையைச் சேர்ந்த மதுரநாயகம் (வயது 54) என்பவரே இவ்வாறு மரணமானவராவர். (உ-10)

## கிளிநொச்சியில் இளைஞர் பலி!

வட்டக்கச்சி, மார்ச் 8

கிளிநொச்சிப் பொலீஸ் நிலையத்துக்கு முன்பாக இளைஞர் ஒருவர் நேற்றுத் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானர்.

மரணமானவர் உதயநகரைச் சேர்ந்த சிவகணேசன் (வயது 21) மெக்கானிக்வேலை செய்பவர் என்று தெரிவிக் கப்பட்டது. (ஓ-163)

## மே மாதம் முதல் அமுலுக்கு வரும்

வடக்கு, கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் மதிய உணவுத் திட்டத்தை எதிர்வரும் மே மாதம்முதல் முழு அளவில் அமுல் படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

வடக்கு, கிழக்கு மாகாண அரசின் கல்வி அமைச்சுச் செயலாளர் இது குறித்து ஆராய்வதற்குக் கல்வி அதிகாரிகளை விரைவில் சந்திக்கவிருக்கிறர்.

## ஊரடங்கு நீக்கம்

கரகாஸ், மார்ச். 8

வெனிஸுலாவில் கடந்த சில தினங்களாக அமுலில் இருந்து வந்த ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு விட்டது.

விலைவாசி உயர்வைக் கண்டித்து, பரவலாக கலவரம் நடந்ததைத் தொடர்ந்து நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் கொண்டு வரப்பட்டது. (எ)

## ஈரான்-பிரிட்டன் உறவு முறிந்தது

தெஹ்ரான், மார்ச் 8

ஈரான் நேற்று பிரிட்டனுடனான ராஜதந்திர உறவை உத்தியோகபூர்வமாக முறித்துக் கொண்டது.

ருஷ்டி விவகாரம் தொடர்பாக போக்கை மாற்றிக் கொள்ள ஈரான் பிரிட்டனுக்கு ஒருவார காலக்கெடுவை விதித்து இருந்தது. அதற்கு பிரிட்டன் மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து உறவு துண்டிக்கப்பட்டது. (உ-எ)

## விடுதலை செய்ய சிபார்சு

கொழும்பு, மார்ச் 8

விமானக் கடத்தல் குற்றத்துக்காக சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட சேபால எக்கநாயக்காவை விடுதலை செய்யுமாறு சிறைச்சாலை லைசென்ஸ் சபை சிபார்சு செய்துள்ளது. (அ-எ)

## மன்னிப்புச்சபை வேண்டுகோள்

சுமார் 200 கைதிகளுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டாம் என்று சர்வதேச மன்னிப்புச் சபை ஜமேக்கா அரசுக்கு விண்ணப்பித்திருக்கிறது.

''இக்கைதிகள் மீதான விசாரணைகள் நீதியான முறையில் நடத்தப்படவில்லை; சில கைதிகள் நீண்ட நாட்கள் சிறையில் இருந்தபடியால் மனநோயாளர்களாகி விட்டார்கள்'' இப்படி மன்னிப்புச்சபை தனது வேண்டுகோளுக்குக் காரணம் காட்டியிருக்கிறது. (எ)

## மெதடிஸ் கல்லூரி நேற்று அதிபரிடம் கையளிப்பு

வல்வெட்டித்துறை, மார்ச்8

பருத்தித்துறை மெதடிஸ் மகளிர் உயர்தரக் கல்லூரி நேற்று சம்பிரதாயபூர்வமாக கல்லூரி அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

கல்லூரியில் முகாம் அமைத்திருந்த படையினர் அங்கிருந்து வெளியேறியதை அடுத்தே கல்லூரி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனையொட்டி கல்லூரியில் சமய நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக தனியார் டியூட்டரிகளில் இருந்த மாணவிகள் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது. (உ-160)

## ● தெற்கில் 11பேர் கொலை!

கொழும்பு, மார்ச் 8

கடந்த 24 மணி நேரத்தில் தென் பகுதியில் 11 பேர் வன் செயல்களில் கொல்லப்பட்டனர்.

காலி மாவட்டத்தில் ஆயுதப்படையினர் தீவிரவாதிகள் முகாம் ஒன்றின் மீது நடத்திய தாக்குதலில் 5 தீவிரவாத சந்தேக நபர்கள் கொல்லப்பட்டனர். 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

இன்னொரு சம்பவத்தில் ஜே. வி. பி. சந்தேக நபர்கள் 5 பேரைக் கொலை செய்தனர். உயிரிழந்தவர்களில் இருவர் ஐ. தே. க. உறுப்பினர்கள். (உ-எ)

## ஈழத்தில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்புக்கள் கிடையாது.

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனைச் சந்தித்தேன்.

இலங்கைத் தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்தை முழுமனதாக ஆதரிப்பதாகவேதோன்றுகின்றது.

இந்திய இராணுவ முகாம்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னணிப் பிரமுகர்ளைத் தடுத்து வைத்திருப்பது குறித்து அவர்கள் வருந்துகின்றனர்.

அவர்களின் இயக்கத்துக்கு எதிரான அரசின் இந்திய வானொலிப் பிரச்சாரத்தை அவர்கள் மறுக்கின்றனர்.

இரகசியப் பயணத்தைமேற்கொண்டதன் மூலம் நான் எனது கட்சிக்கட்டுப்பாட்டை மீறிவிட்டேன்.

இது ஒரு வலிந்து மேற்கொண்ட பயணம். இதற்காக கட்சித் தலைமைப் பீடத்தால் நான் மன்னிக்கப்பட்டேன்.

—இப்படி அவர் மேலும் சொன்னர். (உ-எ)

## கொள்ளை

புதுத் தம்பதியர் சென்ற வான் மறிக்கப்பட்டு அவர்களிடமிருந்து நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

மாங்குளம் பனிக்கன்குளம் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

தம்பதிகள் இராணுவ முகாமில் முறைப்பாடு செய்ததை அடுத்து அப்பகுதிக்கு இராணுவத்தினர் விரைந்த போதிலும் கொள்ளையர்கள் தலைமறைவாகி விட்டனர்.

இதனல் ஒரு மணி நேரம் போக்குவரத்துச் சேவைகளும் ஸ்தம்பித்தன. (இ-94)

## ஈழவர் ஜனநாயக.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தம், அரசியல் யாப்பிற்கான ஆருவது திருத்தம், வடக்கு—கிழக்கு இணைப்பு சம்பந்தமான சர்வசன வாக்கெடுப்பு, அதிகாரத்தைப் பரவலாக்குதல், பாரம்பரிய தமிழ்ப் பகுதிகளின் சமூக அமைப்பு முறைகளை மாற்ற பல்வேறு அரசுகள் எடுத்துள்ள நடவடிக்கைகள், இவற்றினல் நிகழ்ந்துள்ள விவகாரங்கள்—இந்த விடயங்கள் தொடர்பாக பேச்சுக்கள் நடத்தப் பட்டு வருகின்றன.

இந்தப் பேச்சுகள், எமது உறுப்பினர்கள் நாடாளுமன்ற நடவடிக்கைகளில் கலந்து கொள்வதற்குச் சாதகமான முறையில் அமையும் என்று நம்புகின்றேன்.

அரசியல் காரணங்களுக்காசச்சிறைவைக்கப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று நாம் கோரியிருக்கிறோம்.

இவைபற்றி கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று ஜனதிபதி தெரிவித்தார்.

### புதுடில்லியும் செல்லும்

ஈரோஸ் தூதுக்குழு, பேச்சுக்களை நடத்துவதற்காக புதுடில்லிக்கும் விஜயம் செய்யவிருக்கிறது.

பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணவும் அமைதியை ஏற்படுத்தவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் அரசியல் நடவடிக்கைளில் சம்பந்பட்டுக் கொள்வது முக்கியமானது.

ஆனல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை மட்டும் மக்களின் ஏகபோக பிரதிநிதிகளாக நாம் ஏற்றுக் கொள்ளவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணி மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர்.

### ஜே வி, பியுடன் தொடர்பில்லை

நாம் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் அல்லர். ஜே. வி. பியுடன் எந்தவித புரிந்துணர்வோ, தொடர்போ எமக்கு இல்லை— என்றர். (அ-எ)

## வடக்கு கிழக்...

சபை உறுப்பினர் இரு உதவி அரச அதிபர் பிரிவுகளைக் கண்காணிக்கக்கூடியதாக இப்பிரிவுகள் பகிர்ந்தளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் புனர்வாழ்வு, புனரமைப்புக் குழு அமைக்கப்படும். (உ-21)

## முதலாவது வருட நினைவஞ்சலி

| தோற்றம்:- | மறைவு:- |
|---|---|
| 19 - 12 – 1955 | 18 – 02 – 1988 |

திதி-: 08 - 03 - 1989

**திருமதி இந்திரநாதன் கிருபானந்ததேவி**

பிரிவால் துயருறும்

**கணவன்:**
பொ. இந்திரநாதன் சீ– நோர் காரைநகர்)

**பிள்ளைகள்:**
இ. சுஜாத்தா, இ. சுஜாஹரன், இ. சுஜீத்தா
இ. சுஜீஹரன்
(சண்முகநாதமகாவித்தியாலயம் கரம்பொன்)

**பெற்றேர்:**
ம. பொன்னம்பலம், பொ. வள்ளியம்மை ம.
கண்ணகிபுரம் ஊருண்டி, ஊர்காவற்றுறை

உற்றர், உறவினர், நண்பர்கள்.

(9783)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்பலம் பவளரத்தினம்

திருமதி பொன்னம்பலம் பவளரத்தினம் திங்கட்கிழமை (6—3—89) காலமானர். இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், திருமதி இராசதுரை, மலர், ராஜசிம்மன் (பொறியியலாளர் U. K.), மணீஸ்வரி (U. K.), சரோஜினி, பரமேஸ்வரன் (U.K.), ராஜசிங்கம் (U. K.) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜதுரை, ஆனந்தநடராசா, கதிரவேலு (U.K.), வெ. யோகேஸ்வரன், Dr. சாரதா (U. K.), Dr. Mrs யோகி(U. K.), ஆன் (U. S.A.) ஆகியவர்களின் அன்பு மாமியாரும் ஆவார். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: திருமதி ஆனந்தநடராசா
5/1, பண்டாரக்குளம் மேற்குவீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(9778)

## மரண அறிவித்தல்கள்

### அருட்சகோதரர் R. L. றெபேட் (S.S.J.)

அருட்சகோதரர் R. L. றெபேட் 06.03-89-இல் மட்டக்களப்பில் காலமானர். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி இறபாயேலின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருமதி செல்வராணி மரியாம்பிள்ளை, R. ஸ்ரீபன். R. அருட்பிரகாசம், R. L. சேவியர். அருட்சகோதரிகள் செலஸ்ரீன, லில்லி றீற்ற ஆகியோரின் அருமைச் சகோதரரும் அருட்சகோதரி மேரி சிறிலின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னரின் நல்லடக்கம் 09-03-89-இல் மட்டக்களப்பில் நடைபெறும்.

தகவல் :–
ம. மரியாம்பிள்ளை
ஊறணி,
காங்கேசன்துறை.

[9788]

### இளையதம்பி மருதனயகம்

(C. T. B. Training Instructor)

இளையதம்பி மருதனயகம் காலமானர். இவர் செல்வநாயகியின் அன்புக்கணவரும் பிறேமா, காமினி, கலா, சாந்தி சிவா (கோண்டாவில் C. T. B) கிருஷ்ண ஆகியோரின் அருமைத் தகப்பனரும் பரமேஸ்வரனின் அருமை மாமனரும் பரம்சோதியின் அன்பு சகோதரரும் செல்வரத்தினம், செல்வத்துரை, செல்வநாயகம், சுந்தரலிங்கம் (செல்வம்ஸ் பற்றிக்கடை) காலம்சென்றமகேந்திரன், செல்வராணி ஆகியோரின் மைத்துனரும் தவமணி, விஜயலஷ்சுமி, மாணிக்கவாசகரின் சகலனும் ஆவார். இன்று 8-03-89 புதன்காலை 10 மணிக்கு அன்னரது இறுதிக் கிரியைகள் கோப்பாய் மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
மனைவி, மக்கள்

கிழுவானை ஒழுங்கை
கோப்பாய் தெற்கு.

(9964)

### மாப்பாணசிங்கம் சண்முகவடிவேல்

வட்டுக்கோட்டை மேற்கு மாப்பாணசிங்கம் சண்முகவடிவேல் (ஓய்வுபெற்ற ஆசிரியரும், செக்கோசிலவகியா தூதரக உள்நாட்டு நிருவாக அலுவலர்) இயற்கை எய்தியுள்ளார். இவர் வர்ணகுலவதி அம்மாவின் அன்புக் கணவரும், பாலச்சந்திரா (கணக்காளர் சாமுவேல் அன் சன்ஸ், கொழும்பு), சந்திரகுமார் (றேடியோ தொழில்நுட்பவியலாளர்), திருமதி பத்மரஞ்சினி சிவபாதராசா (அவுஸ்திரேலியா), உதயகுமார் (அமெரிக்க ஐக்கியநாடு), திருமதி புஷ்பரஞ்சினி சிவநாதன், ஜெயக்குமார் (கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையும், செல்வி புவனலோசினியின் சுவிகாரத் தந்தையும், திருமதிகள் பா. சிவமலர், ச. வித்தியாரூபி, திருவாளர்கள் சிவபாதராசா, சிவநாதன் (இலங்கை ருபாக்கோ கொம்பனி) ஆகியோரின் அருமை மாமனரும், ஓய்வுபெற்ற தபாலதிபர் இராசதுரை, திருமதிகள் தேவரத்தினம் சிவகுருநாதன், அமிர்தவதி தங்கவாகனம், திலகவதி சடாச்சரம் (யாழ். பொலிஸ் திணைக்களம்), புஸ்பராணி, தணிகாசலம் ஆகியோரின் அருமைச் சகோதரரும், (ஓய்வு பெற்ற இலங்கை விமானப்படையைச் சேர்ந்த பொ. சிவகுருநாதன், நா. தங்கவாகனம் (கடவுச்சீட்டுத் திணைக்களம்), இ. சடாச்சரம் (உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்), ச. தணிகாசலம் (சங்கானை ப.நோ. கூ. ச.), வே. சிவசுப்பிரமணியம் (முன்னள் பொலிஸ் உத்தியோகத்தரும் போக்ளே கொம்பனி அலுவர்), நா. புவனசுந்தரம் (திடீர் பரிசோதனைக் குழு வட பிராந்திய போக்குவரத்துச் சபை) ஆகியோரின் மைத்துனரும், ரஜீவ், தர்சினி, ஜெயந்தன், தனேஷ், பிரசாச் ஆகியோரின் பாட்டனும், பேரின்ப வேலுப்பிள்ளை (பரந்தன் இரசாயனக் கூட்டுத் தாபனம்), மு. வேதாந்தசிவம் (காரைநகர் சீ நோர் திருவாக அலுவலர்) ஆகியோரின் சகலனுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் (8-3-89) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் குகாற்கைதுறை மாயனத்தில் நடைபெறும். இத்தகவலைஉற்றர், உறவினர், நண்பர்கள், அயலவர் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேம்.

தகவல்:
S. ராஜன்

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

(9961)

### RAOSAHIB SINNATHAMBY SIVAPRAGASAM (Siva)

(Textile Technologist புடவைக் கைத்தொழில் தொழில் நுட்பவியலாளர் - Textile Branch Kachcheri Jaffna.)

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. சி. சிவப்பிரகாசம் 5-3-89 ஞாயிறு காலமானர். அன்னர் குணபூபதியின் அன்புக் கணவரும், காலம் சென்ற Rangoon Raosahib Chinnathamby - திருமதி கண்மணி அம்மாள் அவர்களின் கனிஷ்ட புத்திரனும், திரு. ஜெயசிங் (இளைப்பாறிய நீர்ப்பாசன என்ஜினியர்), திரு. சி. தியாகராஜா (கல்வி அதிகாரி, முல்லைத்தீவு), திருமதி P. S. குமாரசாமி (இளைப்பாறிய ஆசிரியை, இராமநாதன் கல்லூரி, சுன்னகம்) ஆகியோரின் அன்புத் தம்பியும், கொக்குவில் திரு. திருமதி தம்பு (ஓய்வுபெற்ற ஓவசியர்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னரின் இறுதிச் சடங்குகள் 6-3-89 திங்கள் நடைபெற்றது. இத்தகவலை உற்றர், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றேம்.

தகவல் :
திரு. சி. தியாகராசா (தமையன்)
(கல்வி அதிகாரி, முல்லைத்தீவு)

வேதாரணியர் வளவு,
பெரிய மதவடி,
உடுவில் கிழக்கு.
சுன்னகம்.

(9965)

91 ஆம் ஆண்டு விஞ்ஞான மாணவர்கட்கு

ஆரம்பம்: 11 03- 1989 SAT & SUN

| | | |
|---|---|---|
| இரசாயனவியல் | Mr. நாகரட்ணம் B. Sc. | 6. 30 |
| விலங்கியல் | Mr. தம்பிராசா B. Sc. | 7. 30 |
| பௌதிகவியல் | Mr. மணியம் B. Sc. | 8. 30 |
| தூய/பிரயோக கணிதம் | Mr. கணேசன் B. Sc. | 9. 30 |
| தாவரவியல் | Mr. சிவவீரசிங்கம் B. Sc. | 10. 30 |
| பௌதிகவியல் | Mr. ரவீந்திரநாதன் B. Sc. | 11. 30 |

3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரி வீதிக்கு அண்மையில்)

★ அதிசிறந்த புள்ளிகள் (A) பெற்ற மாணவர்களில் அனேகர் எமது ஆசிரியர்களிடமே பயின்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (C/ 1820)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினல் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2, இல் உள்ள அச்சகத்தில் 08 - 03 - 1989 இல்அச்சிட்டு வெளியிடப்பட்டது.